## முத்தமிழ் ஆயம் வழங்கும்
## “இலக்கியப்பதாகை” (பறப்பு-10) 24.01.2020




*“தேடிச் சோறுநிதந் தின்று - பல*

*சின்னஞ் சிறுகதைகள் பேசி - மனம்*

*வாடித் துன்பமிக உழன்று - பிறர்*

*வாடப் பலசெயல்கள் செய்து - நரை*

*கூடிக் கிழப்பருவ மெய்தி - கொடுங்*

*கூற்றுக் கிரையெனப்பின் மாயும் - பல*

*வேடிக்கை மனிதரைப் போலே - நான்*

*வீழ்வே னென்று நினைத் தாயோ? “*

என்ற பாரதின் கனல் வரிகளுக்கு சொந்தக்காராய் வாழ்வியலின் அர்த்தத்தோடு வாழ்ந்த ந.மணிமொழியனாரின் நினைவாக, விநாயகா மிஷன்ஸ் ஆராய்ச்சி நிறுவனம், ஆறுபடைவீடு தொழில்நுட்ப வளாகத்தில் கலை மற்றும் அறிவியல் புலத்தின் தமிழ்த்துறையில் மாதந்தோறும் நடைபெறும் திருக்குறள் செம்மல் ந.மணிமொழியனாரின் நினைவைப் போற்றும் விதமாக முத்தமிழாய விழாவின் பறப்பு -10 நிகழ்வு நடந்தேறியது. வேந்தர் அ.ச.கணேசன், இயக்குநர் அனுராதா கணேசன் ஆகியோரின் வாழ்த்தோடும், தமிழ்த்தாய் வணக்கத்தோடும், குத்து விளக்கேற்றலோடும் இனிதே தொடங்கியது. விழாவிற்கு சிறப்பு விருந்தினராக மகாகவி

பாரதியின் எள்ளுப் பேரன் கவிஞர், எழுத்தாளர், பேச்சாளர், பேராசிரியர் என பன்முகம் உடைய திரு. நிரஞ்சன் பாரதி அவர்கள் கலந்து கொண்டார்.

**“21-ஆம் நூற்றாண்டில் திருவள்ளுவர்”** எனும் தலைப்பில் உரை நிகழ்த்தினார். திருக்குறளும் அதன் சிந்தனையும் இக்கால மாணவர்க்கும், எக்கால மனிதர்களுக்கும் தேவையானது என்பதை ஆணித்தரமாக குறிப்பிட்டு ஊக்கம், ஆக்கம், முயற்சி, நல்லொழுக்கம், நல்லுள்ளம் போன்றவை அடிப்படைத் தேவை என்பதையும் குறிப்பிட்டார்.






அதனால்தான் வள்ளுவம் பல நாடுகளில் விரும்பி பின்பற்றி வருகின்றனர் என்பதை குறிப்பிடுமிடத்து “சிங்கப்பூரில் நீர் நிரப்பிய பாட்டிலின் மேல்புறத்தில் திருக்குறள் “நீரின்றி அமையாது உலகெனின்” பதிக்கப்பட்டுள்ளதையும் பிரான்சுவில் ப்ரென்ச் மொழியில் தொடர்வண்டியில் எழுதப்பட்டுள்ளதையும், குறிப்பிட்டார். வள்ளும் எல்லோர்க்கும் தேவையானது என்பதை சுட்டிக்காட்டினார். மாணவர்களும் ஆர்வமுடனும் கேட்டு மகிழ்ந்தனர்.

கலை மற்றும் அறிவியல் புலத்தின் இயக்குநர் முனைவர் ஆர்.சண்முகவள்ளி அவர்கள் தலைமை வகித்து மணிமொழியனாரின் முத்தமிழாய விழாவானது மாணவர்களின் வளர்ச்சிக்கே என்பதை குறிப்பிட்டு தலைமை உரை நிகழ்த்தினார். விழாவின் சிறப்பை போற்றும் வண்ணம் கவிஞர் மார்ஷல் முருகன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். தமிழ்த்துறையின் தலைவர் முனைவர் ப.ஜெயபாரதி அவர்கள் அறிமுகஉரை நிகழ்த்தினார். விழாவினரை வரவேற்று முனைவர். ந.சுரேஷ் வரவேற்புரை நல்கினார். திரு.பழனியப்பா நன்றியுரையும், திரு.அ.முத்துக்குமார் விழாவின் அனைத்து இயக்கங்களுடனும் சிறப்பித்தார். விழாவில் பிற துறைத் தலைவர்களும் பேராசிரியர்களும், மாணவச் செல்வங்களும் கலந்து கொண்டனர். நிறைவாக நாட்டுப்பண்ணோடு விழா நிறைவுற்றது.




2020/01/24 11:33

